ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கிய குடிமக்களில் புரவலர்கள்

க. கவிதா,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம் தொடர்ந்து இக்காலம் இலக்கியங்கள் வரை தமிழரின் பெருமையையும் அவர்களின் வாழ்வியலையும் திறம்பட எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ்விலக்கியங்கள் இரண்டாயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தவை ஆகும். இவற்றை உற்று நோக்கும் போது பண்டைய கால மக்கள் அறத்தின் வழி பொருள் தேடுதலையும், அதனை மற்றவர்களுக்கு வழங்கும் குணத்தோடு வாழ்ந்துள்ளதையும் கூறப்பட்டுள்ளது. பண்புடையவர்களால் தான் உலகம் இயங்குகின்றது. சமுதாயத்தில் வாழும் உறுப்பினர்கள் தாம் பின்பற்றும் பண்பாட்டை வருங்கால தலைமுறையினருக்கு கற்றுக் கொடுத்துள்ளனர் . அவ்வகையில் புரவலர்களின் கொடைத்தன்மையையும், அவர்களின் இயல்பான குணத்தையும் விவரிக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு உணவு முதல் உறைவிடம் வரை புரவலர்கள் வழங்கி வந்துள்ளனர். கொடை என்பது மற்றவர்களுக்கு பொருளை வழங்குதல் என்பது பொருள். இந்தக் கொடை பொருளை மக்கள் முதல் அரசர்கள் வரை வழங்கியதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆதலால் சங்க இலக்கிய குடிமக்களில் புரவலர்கள் என்பது ஆய்வுத்தலைப்பாக கொண்டு ஆராயப்பட்டு வருகின்றது.

குறிப்புச் சொற்கள்

கொடை- ஆண்மை - புரவலர் - குடிமக்கள் - மருத்துவன் - கிணைவன் - பாணர்.

## முன்னுரை

பழங்கால மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள முதன்மையாக நமக்கு இருப்பவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளாக கருதப்படுவது உணவு, உடை, இருப்பிடம் ஆகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழிக்கு ஏற்ப மனித வாழ்வில் முதலிடம் வகிப்பது உணவு ஆகும் உணவே உலகின் அச்சாணி ஆகும்.

## குடிமக்கள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து நிலங்களில் பண்டைய காலம் முதல் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். நிலத்தில் வாழும் மக்களை குடிமக்கள் என்று அழைத்தனர். அவர்கள் வாழும் இடத்திற்கு ஏற்ப சூழலை தகவமைத்து வைத்து தம் அடுத்ததலைமுறையினருக்கும் வழிகாட்டி வாழ்ந்துள்ளனர். பழங்கால மக்கள் ஒன்றாகவும் குழுக்களாகவும் வாழ்ந்து தங்களது அறிவையும் சூழலையும் ஒரே வழியில் அமைத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர் என்பதை நமக்கு சங்க இலக்கியம் உணர்த்துகின்றது. குடிகளாக வாழ்ந்த மக்கள் தங்களுக்குள் தலைவரை தேர்ந்தெடுத்து அடுத்தடுத்த நிலைக்கு முன்னேறி உயர்ந்தனர். ஒவ்வொரு சூழலிலும் அரசர், அந்தணர், வேளாளர், வணிகர் என அனைவரும் அடுத்தடுத்த படிநிலைகளுக்கு முன்னேறினர். இவ்வாறு வாழ்ந்தவர்கள் தங்களுக்குள் பல்வேறு நம்பிக்கைகளையும் தங்களுக்குள் பின்பற்றினார். அவற்றில் ஒன்று கொடை வளம் ஆகும்.

கொடை

கொடைவளம் செய்தவர்களை புரவலர்கள் என்பார்கள் தம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுபவர்கள் ஆவார். கொடை வளத்தில் முதன்மையானது உணவுக் கொடை. உணவே மருந்து பழங்கால முதல் மக்கள் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றனர். உணவைக் கொடுத்து பசியை போக்கியவர்களே புரவலர்கள் அதாவது மருத்துவர்கள் ஆவார். இதனை,

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்" (புறம்173 :11)

என்று புறநானூறு பாடல் வழி சிறுகுடி என்ற ஊருக்கு தலைவனாக இருந்த பண்ணன் என்பவனைப் புலவர் அவர் குறிப்பிட்டுள்ளது நமக்கு தெரிய வருகிறது. மன்னனோ மக்களோ எவராயினும் அறவழியை சரியாக கடைப்பிடித்து நடக்கின்றனர் என்றால் அவ்வழியை அனைவரும் இக்காலம் வரை பின்பற்றி நடப்பர் என்பதில் ஐயமில்லை. அப்படி நடைபெற்று வருகின்ற நிகழ்வில் ஒன்றை சங்க இலக்கிய பாடல்கள் வழி எடுத்துக்காட்டியுள்ளனர் புலவர்கள். புகழ் என்றாலே கல்வி ஆண்மை முதலிய பிற காரணங்களால் உழவேனும் கொடையே முதன்மையும் பெறுகின்றது

"ஈதல் இசை பட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிருக்கு" (குறள் .231)

என்று திருக்குறள் கூறுகின்றது. போரில் வென்று பகை மன்னரின் பொருள்களை வெற்றி பெற்ற மன்னர்கள் இரவலருக்கு பரிசாக வழங்கியுள்ளனர். பகைவேந்தரின் மணிமுடி யானை முகத்து அணிய பெற்ற ஓடை பொன் முதலியவை அணிகலன்கள் செய்து பாணர் விறலியர் முதலியவருக்கு அரசன் வழங்கியுள்ளான். செல்வத்துப் பயனே ஈதல் என்ற நக்கீரரின் கூற்றுக்கிணங்க சங்க காலத்தில் தலைவனின் பொருள் வயிர் பிரிவிற்கு காரணம் பிறருக்கு உதவுதலே ஆகும். தம் நிலத்தை விட்டு வேற்று நாட்டிற்குச் சென்று பொருள்களை கொண்டு வருவர் அதற்குக் காரணம் அற வழியில் நின்று இரப்போருக்கு ஈதலே கடமை என்பதை மனதில் கொண்டு செல்வர்.இதனை,

"ஈதலும் துய்த்தலும் இல்லோருக்கு இல்லெனச்
செய்வினை கைம்மிக என்னுதி" (குறுந் 63:1,2 )

என்ற பாடலடி பறைசாற்றுகின்றது. பண்டைய கால முதலே அறவழியில் நின்று பொருள் கொடுக்கும் மரபு இருப்பதை நமக்கு குறிப்பிடுகின்றது.

"அறத்தான் வருவதே இன்பம் " (குறள் . 39)

திருக்குறள் கூறுகின்றது. கொடைப்பொருளும் அறத்தால் ஈட்டியதாக இருக்க வேண்டும். அதனால்தான் முயற்சியால் ஈட்டிய பொருள்களை தம் இல்லத்திலிருந்து விருந்து அவர்களோடு பகுத்துள்ளதலை இன்பத்தோடு கொடுத்துள்ளனர்.

கொடையின் தன்மை

உலகமானது எப்படி நீரால் சூழப்பட்டுள்ளதோ அதுபோல் மக்கள் அறவழியில் நின்று வாழ்ந்துள்ளனர்.

"நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" ( புறம் 18:18,19)

நீரை இமையாத உடம்பிற்கு எல்லாம் உணவு கொடுத்தவர்கள் அவர்கள் ஆவார்கள்

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம் 18:20)

என்ற குடபுலவியனார் பாடல் வழி உணவால் உண்டாகிய உடம்பு உணவை முதலாக உடையது. உணவு சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீரே ஆகும்.

புரவலரின் தன்மை

உதவி செய்யும் குணத்துடன் மற்றவர்களுக்கு பொருள்களை வாரி வாரி கொடுத்தவர்களை புரவலர்கள் என்று அழைப்பர்

"புரவலர்கள் அதாவது வேந்தர்கள் வழங்கும் உணவுத் தவிர அவர்கள் நாட்டிலுள்ள பல்வேறு நிலங்களைச் சேர்ந்த குடிகள் விருந்து ஓம்பும் உணவுகள் பற்றியும் விளக்கங்கள் உள்ளன. புரவலர் நாட்டுக் குடிகள் ஓம்பும் உணவுகள் அந்த புரவலன் நாட்டு வளத்தை எடுத்துக் கூறுவதாக கருதப்பட்டன" ராஜ் கௌதமன் தம் நூலில் கூறியுள்ளார். புரவலர்கள் வழங்கிய கொடை

வளத்தை மட்டும் அறிவதல்லாமல் பழங்கால மக்களின் வாழ்வியலையும், நாட்டு வளத்தையும் நம்மால் காண இயல்கிறது.

மன்னர்களின் கொடை இயல்பு

நாடு சிறந்து இருக்க வேண்டும் எனில் மன்னன் அறவழியில் நிற்க வேண்டும் . அதற்கு ஏற்ப கீழ் வரும் பாடல் அடி நமக்கு பறைசாற்றுகின்றது.

" இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறிவிலை வணிகன். ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே" ( புறம் 134:1-4)

என்று உறையூர் ஏனிச்சேரி முடமோசியார் பாடல் வழிஇப்பிறப்பிற் செய்த நல்வினை மறுபிறப்பிற்கு உதவும் என்று கருதி பொருளை விலையாக கொடுத்து அதற்காக அறத்தை வணிகன் அல்லான் என்றார். பண்புகள் அமைந்த பெரியோர்கள் சென்ற வழி இன்று பின்பற்றி வாழ்ந்து வந்து கொடைமையே பாராட்டுகின்றார். மேலும்,

" எத்துணை யாயினும் ஈத்தல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர் வறுமை நோக்கென்று அவன் கைவண்மையே'' ( புறம் 141:13-15)

என்ற பரணர் பாடல் வழி அறிய முடிகின்றது. எவ்வளவு பெரிய சூழல் ஏற்பட்டாலும் மற்றவருக்கு நிலை மாறாமல் இருக்க வேண்டும் கைவன்மையுடன் இருந்த செய்தியை அறிய முடிகிறது .மேலும்

" மெல்ல வந்துஎன் நல்அடி பொருந்தி
ஈ என இறங்குவர் ஆயின் சீருடை
முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினும் கொடுக்குவேன்" ( புறம் 73: 1-4)

என்ற சோழன் நலங்கிள்ளி பாடல் வழி அறிய முடிகின்றது. மெல்ல வந்து என் நல்லடிகளை அடைந்து எமக்கு ஈய வேண்டும் என்று பணிந்து இரப்பாரானால் அவர்களுக்கு சிறப்புமிக்க முரசு பொருந்திய பழையதாய் வரும் உரிமையுடைய என் அரசாட்சியை கொடுத்தல் எளிது அவர்களுக்கு என் இனிய உயிரே யாயினும் கொடுப்பேன் என்று கூறுவதில் இருந்து கொடையின் சிறப்பை அறிய முடிகிறது. மேலும்,

" பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடு இளந் ததனினும் நனிஇன் னாதென
வாள்தந் தனனே தலைஎனக்கு ஈய
தன்னின் சிறந்தது பெரிது ஒன்று இன்மையின்" ( புறம் 165:10-13)

இப்பாடல் வழி பெருமையுடைய பரிசிலன் பரிசு பெறாது வருத்தமுற்று மீள்தல் தன் நாட்டை இழந்த துன்பத்திலும் மிகப்பெரிய துன்பம் என கருதி தன் அகத்து எனக்கு தண்ணீர் சிறந்த பொருள் வேறு இல்லாமையால் தன் தலையை எனக்கு தர வாளை கொடுத்தான் என இளங்குமனனிடம் குமணன் கொடுத்த வாளைக்காட்டி பெருந்தலைச் சாத்தனார் கூறினார். இன்று வரை குமணனின் கொடை வளத்தை காணலாம்.

மன்னனின் இயல்பு

பழங்காலத்தில் மன்னர்கள் பாணன் பொருநன் கிணைவன் என அனைவருக்கும் நெய்யால் ஆன உணவும் கை நிறைய பொருளும் கொடுத்து அவர்களை வாழ வைத்துள்ளனர். கலை ஒன்றை மட்டுமே தம் வாழ்க்கையாக கொண்டவர்களுக்கு அவர்களின் வாழ்க்கை முழுமை அடைய உணவும் பொன்னும் பொருளும் கொடுத்து உதவியுள்ளனர். மேலும்,

" நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு
மணிக்கலன் நிறைந்த மணம் நாறு தேறல்" ( புறம் 397:13,14)

புறநானூறுபாடல்வரி கிணைவனுக்கு நெய்யில் பொரித்த தாளித்த சூட்டுக்கறியும் மணிக்கலம் நிறைய மனம் கமழும் மதுவும் வழங்கப்பட்டது. மக்களின் உணவு தேவை அறிந்து மன்னர்கள் சிறப்பாக வழங்கியுள்ளனர். மேலும்,

"குறுந்தால் ஏற்றைக் கொழுக்கன் அவ்விளர்
நறுநெய் உறுக்கி நாட்சோறு ஈயா
வல்லன் எந்தை பசி தீர்த்தல்" ( புறம் 379:8-10)

குறிப்பிடுகின்றது. மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்ந்த மக்களுக்கு மன்னர்கள் பன்றியின் கொழுத்த கறியை நறுநெய் யில் உருக்கி செய்த பொறியியல் சோறு வழங்கியுள்ளனர். மேலும்,

“ குறுமுயலின் நிணம் பெய் தந்த
நறுநெய்ய சோறு என்கோ? “ ( புறம் 396:17,18)

புறநானூறு பாடல் கூறுகின்றது. குறு முயற் கறியோடு நீ பெய்த சோறு வழங்கினர். இவ்வாறு அரசர்கள் தம்மை நாடி வருபவர்களை பசி கொடுமை இல்லாமல் பாதுகாத்துள்ளான்.

குடிமக்களின் கொடை வளம்

மன்னர்களின் அடுத்த நிலையில் உள்ளவர்கள் மக்களே. நாட்டிலுள்ள பல்வேறு குடிகளை சேர்ந்த குடிகளும் விருந்தோம்பி உள்ளனர் என்பதை கீழ் வரும் பாடல் அடிகள் மூலம் காணலாம்.

முயல் சுட்ட ஆயினும் தருகுவேன் புது தந்து
இங்கு இருந்தீமோ முதுவாய் பானை ( புறம் 319: 8,9)

என்று கூறுகின்றது. அறிவு வாயை உடைய பாணனே, இயலின் சுட்ட கறி துண்டுகளை யாயினும் உணவாக தருவோம் அவற்றை உண்பதற்கு என் இல்லத்துள் புகுந்து இங்கே தங்கி இருப்பீராக என்று குடிமக்கள் பாணர்களை அழைத்து உணவு வழங்கி உள்ளனர். பண்போடும் பரிவோடும் மக்கள் இருந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. மேலும்,

" வேட்டை சிறாஆர் சேன்புலம் படராது
படப்பைக் குறுந்தாள் உடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொடு ஓரங்கு
வருவிருந்து அயரும் விரும்பினாள்" ( புறம் 326:8-12)

புறநானூறு கூறுகின்றது. வேட்டைக்கு செல்லும் சிறுவர்கள் நெடுந்தொலைவு செல்லாமல் பகுதியில் ஆழமான இருந்து கொண்டு வந்த குரிய தாளினை உடைய உடும்பு கறியும் தயிருடன் கூட்டிய கூலினையும் புதிதாக சமைத்த பிற நல்ல உணவு வகைகளையும் பாணர்களோடு உடன் வந்த விருந்தினர் பலருக்கும் அக்குடிகள் வழங்கியுள்ளனர். ஒருவருக்கு மட்டும் உணவு வழங்காமல் பலருக்கும் உணவு கொடுத்து சிறப்பித்துள்ளனர். " நாகரீகம் என்பது திருந்திய வாழ்க்கை அது எல்லா பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் அது பொருள்களையும் தமக்கும் பிறருக்கும் பயன்படுத்துவது" ஞா.தேவநேய பாவணர் தன் நூலில் கூறியுள்ளார். பண்டைய கால முதல் மக்கள் பண்பாட்டோடு வாழ்ந்துள்ளனர் என்பதை சங்கப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது. மேலும்,

"குறுங்கால் உலக்கை ஓச்சி நெருங்கிணற்று
வல்லூற்று உவரி தோண்டி தொல்லை
முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி
வாராத அட்ட வாடு ஊன் புழுக்கல்
வாடா தும்பை வயவர் பெருமகன்
ஓடா தானை ஓண் தொழிற் கழற்கால்
செவ்வரை சென்னியம் எனினே
தெய்வ மடையன் தேக்கிலை குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெருகுவீர் " (பெரும். 95-105)

பெருமானாற்றுப்படை பாடலடிகள் குறிப்பிடுகின்றது. எயினர்கள் தாம் கொண்டு வந்தபுல்லரிசியை உலக்கையில் அதைக் குற்றியெடுத்து ஆழ்ந்த கிணற்றில் அமைந்த நீரை எடுத்து பழைய விழிப்பு உடைந்து போன பானைகளில் உளஏற்றி சோறு சமைக்கின்றனர் வாடாத தும்பை கூடிய போர் தொழிலில் வல்ல வீரர்கள் தலைவனும் புறம் கொடுத்து ஓடாத படையை உடையவனும், மலைநாட்டை உடையவனும் பாணர்களும் நாங்கள் சமைத்த புல்லரிசி சோற்றை கருவாட்டோடு சேர்த்து தெய்வத்திற்கு பலியிடுமாறு போல தேய்க்கிலையில் வைத்து

*தருவர் பசுமை தீர்த்த சுற்றத்துடன் இந்த உணவினை கொடுப்பர். இவ்வாறு தங்கள் சமைத்த உணவை மற்றவர்களுக்கு கொடுத்து மகிழ்ந்துள்ளனர்*

*முடிவுரை*

*கொடைவளம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது என்பதற்கு சான்றாக இக்காலங்களிலும் பசியால் வாடும் மக்களுக்கு தங்களிடம் உள்ள உணவை மற்றவர்களுக்கு அன்னச்சத்திரங்கள் மூலம் வழங்கி வந்துக் கொண்டிருக்கின்றனர். பொன், பொருட்களை காட்டிலும் உணவே ஒரு நாட்டின் அச்சாணி ஆகும். அதை சார்ந்தே அனைத்து துறைகளும் இயங்கி வளர்ச்சி அடைந்துள்ளது. பழங்கால மக்கள் திருந்திய ஒழுக்கம் அதாவது கொடுக்கும் வல்லமை குணத்தோடும் பண்பாட்டோடும் வாழ்ந்து வந்துள்ளனர். புலவர்கள் மன்னனின் வெற்றிப் புகழை பாடுவதை காட்டிலும் அவர்களின் புரவலராக இருந்து மற்றவர்களுக்கு உதவிய வல்லமை குணத்தை சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளனர். மன்னர் மட்டுமல்லாமல் மக்களும் மற்றவர்களுக்கு உணவு கொடுத்து புரவலர்களாக திகழ்ந்துள்ளனர்.*

*பார்வை நூல்கள்*


*1. சங்க இலக்கிய புறநானூறு,(உரை) கு.வே பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்,சென்னை,2004*

*2.சங்க இலக்கிய குறுந்தொகை,(உரை) கு.வே பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்,சென்னை,2004*

*3. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு,(உரை)வி. நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை,2004*

*4.திருக்குறள், (பதி) எஸ். கௌமாரி ஈஸ்வரி சாரதா பதிப்பகம் ராயப்பேட்டை, சென்னை.2004*

*5. ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும் டிசம்பர் 2006 தமிழினி பதிப்பகம் சென்னை . பக்கம்.211)*

*6.பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும் ஞா.தேவநேய பாவணர், 2014 உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை -113 பக்கம்.7)*


********* ********* ********** ********* ********* ********** ********** **********